# செய்யுள் வினாவிடை

1. **தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?**

**"அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே"**

- தமிழே! தாய்மொழியே! அழகான செழுந்தமிழே!
- பழமைக்குப் பழமையாய்த் தோற்றம் கொண்ட நறுங்கனியே!
- குமரிக்கண்டத்தில் நிலைபெற்று அரசாட்சி செலுத்திய மண்ணுலகப் பேரரசே!
- பாண்டியனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே!
- பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய அனைத்துமானவளே!
- பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து உன்னை வாழ்த்துகின்றோம்.

**"முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"**

**தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.**

| பாடல் அடிகள் | தமிழ் | கடல் |
|---|---|---|
| முத்தமிழ் | இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ். | முத்தினை அமிழ்ந்து எடுத்தல். |
| முச்சங்கம் | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்கள். | வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகள். |
| மெத்த வணிகலன் (மெத்த அணிகலன்) | ஐம்பெருங்காப்பியங்கள். | மிகுதியான வணிகக் கப்பல்கள். |
| சங்கத்தவர் காக்க | சங்கப்பலகையில் அமர்ந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தமை. | நீரலையைத் தடுத்து நிறுத்தி சங்கினைக் காத்தல். |

I

**'காற்றே வா' பாடலில் பாரதியார் கூறும் செய்தி யாது?**

- மகரந்தத்தூளைச் சுமந்து கொண்டு மனதை மயங்கச் செய்கின்ற வாசனையுடன் வா.
- இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து வா.
- உயிர்வளியைக் கொடு. ஆனால் பேய்போல் வீசி உயிராகிய நெருப்பை அணைத்து விடாதே.
- நீடித்து நின்று நன்றாக வீசு, உன் சக்தி குறைத்து எம் உயிரை அவித்து விடாதே!
- உம்மை நாம் பாடுகிறோம், புகழ்கிறோம், வழிபடுகிறோம் என்றெல்லாம் பாரதி, 'காற்றே வா' என்ற பாடலில் பாடுகிறார்.

**முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்தியைத் தொகுத்து எழுதுக.**

**மழை மேகம் :**

மாவலி மன்னன் நீர் வார்த்துத் தரும்போது மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்த திருமாலின் உருவத்தைப் போன்று அமைந்தது பெரிய மழைமேகம்.

**மழைப்பொழிவு :**

பெருந்தோற்றம் கொண்ட மேகம் வலமாய் எழுந்தது. மலையைச் சூழ்ந்தது. விரைந்த வேகத்துடன் பெரு மழையைப் பொழிந்தது.

**தெய்வ வழிபாடு :**

- முதுபெண்கள் காவலையுடைய ஊர்ப்பக்கம் சென்றனர்.
- யாழிசை போன்று ஒலிக்கும் வண்டுகள் நறுமணம் கொண்ட பூக்களைச் சுற்றி ஆரவாரிக்கும்.
- மலர்ந்த முல்லைப் பூவோடு நாழியளவு நெல்லையும் சேர்த்து தெய்வத்தின் முன் தூவுவர்.
- தெய்வத்தைத் தொழுது தலைவிக்காக நற்சொல் கேட்டு நிற்பர்.

**கன்றின் வருத்தம் :**

சிறு தாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது. அதன் வருத்தத்தை ஓர் இடைமகள் கண்டாள்.

**வருந்தாதே :**

புல்லை மேய்ந்த உன் தாய்மாரை வளைந்த கத்தியை உடைய கம்பைக் கொண்ட என் இடையர் இப்பொழுது ஓட்டி வந்து விடுவார் ‘வருந்தாதே’ என்றாள் இடைமகள்.

**முதுபெண்டிர் தலைவியிடம் கூறியது :**

இடைமகள் மூலம் நற்சொல்லைக் கேட்டோம். நின் தலைவன் பகைவரை வென்று திரைப் பொருளோடு வருவது உறுதி. மனத்தடுமாற்றம் கொள்ளாதே.

**விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கம் குறித்து காசிக்காண்டம் குறிப்பிடும் செய்தி யாது?**

**‘‘விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்**
**வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்’’**

- விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை எதிர்கொண்டு வியந்து உரைத்தல் வேண்டும்.
- நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல் வேண்டும்.
- முகமலர்ச்சியுடன் அவரை நோக்கி, ‘வீட்டிற்குள் வருக’ என்று வரவேற்று,
- அவர் எதிரில் நின்று,
- அவர் முன் மனம் மகிழும்படி பேசுதல் வேண்டும்.
- அவர் அருகிலேயே அமர்ந்து கொண்டு,
- அவர் விடை பெற்றுச் செல்லும் போது, வாயில்வரை பின் தொடர்ந்து செல்லல் வேண்டும்.
- வந்தவரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல் வேண்டும்.

மேற்கண்ட செயல்கள் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கமாக காசிக்காண்டத்தில் கூறப்பட்டுள்ளது.

## கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலை கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

### ஆற்றுப்படுத்துதல் பொருள் :

ஆற்றுப்படுத்தும் கூத்தன் வள்ளலை நாடி எதிர் வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம், நீயும் அவ்வள்ளலிடம் சென்று வளம் பெற்று வாழ்வாயாக எனக் கூறுதல் ஆற்றுப்படுத்துதல்.

### பயணம் - சிற்றூரை அடைதல் :

பகலில் இளைப்பாறி செல்லுங்கள். இரவில் சேர்ந்து தங்குங்கள். எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து கொள்ளுங்கள். சிவந்த பூக்கள் கொண்ட அசோக மரங்கள், மூங்கில்கள் ஓசை எழுப்பும் மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.

### நன்னனின் கூத்தர்கள் :

பகைவரைப் பெறாமல் போர் செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.

### இனிய சொற்கள் :

நீங்கள் உரிமையுடன் நன்னன் ஊரார் வீட்டிற்குள் நுழையுங்கள். அவர்கள் உங்களுடன் உறவினர்கள் போலப் பழகி இனிய சொற்களைப் பேசுவார்கள்.

### உணவு :

நெய்யில் வெந்த மாமிசம், தினை சோறு ஆகியவற்றை உணவாக அளிப்பர். மேற்கண்டவாறு கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தினான்.

## குலசேகர ஆழ்வார் குறித்து குறிப்பு வரைக.

| | |
|---|---|
| பெயர் | - குலசேகர ஆழ்வார் |
| ஊர் | - திருவஞ்சிக்களம் (கேரளம்) |
| நூல்கள் | - பெருமாள் திருமொழி, முகுந்தமாலை. |
| புலமை | - வடமொழி, தென்மொழி |
| காலம் | - எட்டாம் நூற்றாண்டு |
| பாடப்பகுதி | - நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஐந்தாம் திருமொழி 105 பாடல்கள் உள்ளன. |

## குலசேகரர் திருவித்துவக் கோட்டு இறைவனிடம் வேண்டுவது யாது?

**மருத்துவரை நேசித்தல் :**

மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என உணர்ந்து நோயாளி மருத்துவரை நேசிப்பார்.

**இறைவன் அருளை எதிர்பார்த்தல் :**

இறைவனே நீ உன் விளையாட்டால் எனக்கு நீங்காத துன்பத்தைத் தந்தாலும் நோயாளியைப் போல உன் அருளை எதிர்பார்த்து வாழ்கிறேன்.

சங்க இலக்கியமான பரிபாடல் நூலில் பூமியின் தோற்றம் குறித்து சொல்லப்பட்டுள்ளது.

- எதுவுமே இல்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குக் காரணமான கரு பேரொலியுடன் தோன்றியது.
- உருவமில்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானம் என்னும் முதல் பூதங்கள் உருவாகின.
- அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும் படியாகப் பல காலங்கள் கடந்தது.
- பின்னர் பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது.
- மீண்டும் மீண்டும் நிறை வெள்ளத்தில் இப்பெரிய புவி மூழ்கி உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது.
- இச்சூழல் மாற்றத்தினால் உயிர்கள் தோன்றி நிலை பெற்று வாழ்கின்றன.
- புவி உருவாகிய நிகழ்வை அறிவியல் அறிஞர்கள் கண்டறியும் முன்பே நம் தமிழர் கண்டறிந்தனர் என்பது தமிழருக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியும் பெருமைக்குரிய செயலுமாகும்.

## இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

### மன்னனின் அவையில் இடைக்காடனார் :

குசேலபாண்டியன் மிகுந்த கல்வியறிவு உடையவன். இதைக் கேள்வியுற்ற இடைக்காடனார் வேப்ப மாலை அணிந்த குசேலனின் அவைக்குச் சென்று தான் இயற்றிய கவிதையைப் படித்தார்.

### இடைக்காடனாரின் புலமையை அவமதித்தல் :

வேப்பமாலை அணிந்த குசேலபாண்டியன். தமிழறியும் பெருமான், அடியார்க்கு நல்நிதி போன்றவன், பொருட்செல்வமும் கல்விச் செல்வமும் உடையவன் என்று கேட்டுணர்ந்து தாங்கள் முன் சுவை நிரம்பிய கவிதை பாடினேன் என்றார் இடைக்காடனார். பாண்டியன் சிறிதேனும் தலை அசைக்காமல் புலவரின் புலமையை அவமதித்தான்.

### இடைக்காடனார் இறைவனிடம் முறையிடுதல் :

பாண்டியன் என்னை இகழவில்லை. சொல்லின் வடிவான பார்வதியையும், பொருளின் வடிவான உம்மையும் அவமதித்தான் என்று சினத்துடன் இறைவனிடம் கூறினார்.

### இறைவன் கோவிலை விட்டு வெளியேறுதல் :

இடைக்காடனாரும் கோவிலைவிட்டு வெளியேறினார். வெளியேறுவதால் நண்பர் கபிலருக்கும் மனம் மகிழ்வு உண்டாகும் என நினைத்தார். இறைவனும் கோவிலை விடுத்து வடக்கே வையை ஆற்றின் தென்பக்கம் கோவில் கொண்டார்.

### இறைவனிடம் மன்னன் வேண்டுதல் :

என் படைகளால், பகைவரால், கள்வரால், விலங்குகளால் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? மறையவர் ஒழுக்கம் குறைந்தாரோ? தவமும், தானமும் சுருங்கியதோ? இல்லறமும், துறவறமும் தத்தம் வழியில் தவறினவோ? தந்தையே நான் அறியேன் என்றார் குலசேகரபாண்டியன்.

**இறைவனின் பதில் :**

'வயல் சூழ்ந்த கடம்ப வனத்தைவிட்டு ஒருபோதும் நீங்கமாட்டோம்.' 'இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர உன்னிடம் குற்றம் இல்லை' என்றார். 'இடைக்காடன் மீது கொண்ட அன்பினால் இங்கு வந்தோம்' என்றார்.

**பிழையைப் பொறுத்தருள இறைவனிடம் வேண்டுதல் :**

வானிலிருந்து ஒலித்த இறைவனின் சொல் கேட்டான் குசேல பாண்டியன். பரம்பொருளே! புண்ணியனே! சிறியவரின் குற்றம் பொறுப்பது பெரியவர்க்குப் பெருமை என்று குற்றத்தைப் பொறுக்க வேண்டினான்.

**மன்னன் இடைக்காடனாருக்குப் பெருமை செய்தல் :**

மன்னனின் மாளிகை வாழை, சாமரை இவற்றாலான விதானமும் விளக்கும் உடையது. பூரண கும்பம் மாலை, கொடி இவற்றால் ஒப்பனை செய்யப்பட்டது. புலவர்கள் சூழ இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் அமர்த்தினான்.

**மன்னன் புலவரிடம் வேண்டுதல் :**

மன்னன் புலவர்களிடம், தான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றான். புலவர்களும், நீர் கூறிய அமுதம் போன்ற சொல்லால் எங்கள் சினம் தணிந்துவிட்டது என்றனர்.

**ஏன் கல்வியைப் போற்றிக் காக்க வேண்டும் என செய்குதம்பிப் பாவலர் குறிப்பிடுகிறார்?**

அருளினைப் பெருக்கி, அறிவைச் சீராக்கி, மயக்கம் அகற்றி, அறிவுக்குத் தெளிவு தந்து, உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே ஆகும். எனவே, அதைப் போற்றிக் கற்க வேண்டும் என செய்குதம்பிப் பாவலர் குறிப்பிடுகிறார்.

**செய்குதம்பிப் பாலவலர் குறிப்பு வரைக.**

பெயர் : செய்குதம்பிப் பாவலர்

பிறப்பு : ஜூலை 31, 1874

ஊர் : கன்னியாகுமரி – இடலாக்குடி

சிறப்பு : 15 வயதில் செய்யுள் இயற்றும் ஆற்றல், 1907இல் சதாவதானி பட்டம் பெற்றார்.

**பூத்தொடுத்தல் என்னும் கவிதையில் பூவை என்ற சொல் யாரைக் குறிக்கிறது? அப்பூவை தொடுப்பது எப்படி?**

இப்பாடலில் குறிக்கும் பூவை என்ற சொல் மலரையும் பெண்ணையும் ஒப்பிட்டுக் கூறியுள்ளது.

- பூவை இறுக்கி முடிச்சிட்டால் காம்பின்
  கழுத்து முறிவது போல பெண்களின்
  கழுத்து முறியும்.

- தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவுவது போல பெண்ணின் தளர்ந்த வாழ்வும் நழுவும்.
- வாசலிலே மரணம் வந்து நின்றாலும் வருந்தாமல் சிரிக்கும் பூவைப் போல பெண்ணும் வருத்தங்கள் வந்தபோது அவற்றை சுமையாகக் கருதாமல் சிரிக்கின்றாள். இந்த பெண்ணாகி பூவை தொடுப்பது எப்படி.

**வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.**

**வைத்தியநாதபுரி முருகன் செங்கீரை ஆடும் அழகு :**

**கிண்கிணி :**

கால்களில் அணிந்திருந்த சிறு செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடின.

**அரைஞாண் மணி :**

இடையில் அரைஞாண் மணியோடு ஒளி வீசிகின்ற அரை வட்டங்கள் ஆடின.

**சிறு வயிறு :**

பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறு வயிறு சரிந்தாடியது.

**நெற்றிச் சுட்டி :**

பட்டம் கட்டிய நெற்றியில் பொட்டுடன் வட்டவடிவான சுட்டி பந்தாடியது.

**குண்டலங்கள் :**

கம்பிகளால் உருவான குண்டலங்களும் காதின் குழைகளும் அசைந்தாடின.

**உச்சிக் கொண்டை :**

உச்சிக் கொண்டை அதில் சுற்றிக் கட்டப்பட்டுள்ள ஒளியுள்ள முத்துக்களோடு ஆடியது.

**முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்.**

- முதல் மழை விழுந்தவுடன் நிலம் ஈரத்தால் பண்பட்டது.
- விரைந்து சென்று பொன் ஏரிலே காளைகளைப் பூட்டி, நிலத்தை உழுதனர். ஊக்கத்துடனும், வலிமையுடனும் உழைத்தனர். நாற்று நட்டனர்.
- மேலும் மழை பொழிய நிலம் குளிர்ந்தது. நாற்றுகள் நிமிர்ந்து வளர்ந்தன. கிழக்கும் வெளுத்தது. கவலையும் மறந்தது.

## பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக.

### சோழ நாட்டின் வளம்:

| நாட்டு வளம் | மக்கள் வளம் |
|---|---|
| யானைகள் மட்டும் பினிக்கப்படுகின்றன | மக்கள் பிணிக்கப்படுவதில்லை |
| சிலம்புகள் மட்டும் புலம்பும் | மக்கள் புலம்புவதில்லை |
| ஓடைகள் மட்டும் கலக்கமடையும் | மக்கள் கலக்கம் அடைவதில்லை |
| மாங்காய் மட்டும் வடுப்படும் | மக்கள் வடுப்படுவதில்லை |
| மலர்கள் மட்டும் பறிக்கப்படுகின்றன | மக்கள் உரிமை பறிக்கப்படுவதில்லை |
| காடுகள் மட்டும் (கொடியவனாய்) கொடி உடையதாய் இருக்கும் | மக்கள் கொடியவராய் இல்லை |
| வண்டுகள் மட்டும் கள்(தேன்) உண்டு மயங்கும் | மக்கள் கள் உண்பதில்லை |
| மலை மூங்கில் மட்டுமே வெறுமையாய் இருக்கும் | மக்களிடையே வெறுமை இல்லை |
| வயலில் நெற்கதிர்கள் மட்டும் போராக எழுகின்றன | சோழநாட்டில் போர் இல்லை |
| நீண்ட மலைகளை இருள் சூழ்ந்திருக்கின்றன | நாட்டில் வறுமை இருள் இல்லை |
| மான்களின் கண்கள் மருள்கின்றன | மக்கள் கண்களில் மருட்சியில்லை |
| குளத்து மீன்கள் பிறழ்ந்து செல்கின்றன | மக்கள் நிலை பிறழ்வதில்லை |
| செவிலியரே சினங்கொள்வர் | வேறு யாரும் சினம் கொள்வதில்லை |
| புலவர் பாட்டில் பொருள் மறைந்து இருக்கிறது | சோழநாட்டில் யாரும் பொருளை மறைப்பதில்லை |
| இசைப்பாணரே தெருவில் கூடி ஆடிப்பாடுவர் | வேறு யாரும் அவ்வாறு ஆடுவதில்லை |

### மன்னனின் சிறப்பும் பெருமையும் :

மன்னன் மக்களுக்கு காவல் தெய்வமாக தாயாக தந்தையாக இருக்கிறான். மகன் இல்லாதோர்க்கு மகனாக இருக்கிறான். உலக உயிர்களுக்கு உயிராக, விழியாக, மெய்யாக, புகழ் பெற்ற நூலாக புகழ் அனைத்துக்கும் தலைவனாக விளங்குகிறான்.

மருவூர்ப்பாக்க வணிக வீதிகள் குறித்து சிலப்பதிகாரம் கூறுவது யாது?

- மருவூர்ப்பாக்கத்து வணிகவீதிகளில் வண்ணக்குழம்பு, சுண்ணப் பொடி விற்கப்படுகின்றன.
- குளிர்ச்சி பொருந்திய சந்தனம், பூ வகைகள், ஊதுவத்தி, அகில் போன்ற நறுமணப்பொருள்களும் விற்கப்படுகின்றன.
- பொன், மணி, முத்து, பவளம் ஆகியவை மருவூர்ப்பாக்க வீதிகளில் விற்பனை செய்யப்பட்டது.
- வணிக வீதிகளில் குவியலாகக் கிடந்தது தானிய வகைகள்.
- மருவூர்ப்பாக்கத் தெருக்களில் உப்பு, வெற்றிலை, நறுமணப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது
- வெண்கலம், செம்புப் பாத்திரம், மரப்பொருட்கள். இரும்புப் பொருட்கள் கிடைத்ததைப்
- மருவூர்ப்பாக்க வீதிகளில் பொற்கொல்லர், இரத்தினவேலை செய்பவர், தையற்காரர், தோல் பொருள் செய்பவர், தையற்காரர், துணியாலும், கட்டையாலும் பொம்மை செய்பவர்கள் என பலதிறப்பட்ட கைவினைஞர்கள் இருந்தனர்.

**'ஞானம்' கவிதை உணர்த்தும் பொருள் யாது? (அல்லது) ''அறப்பணி ஓய்வதில்லை, ஓய்ந்திடில் உலகமில்லை'' - எனக் கவிஞர் கூறக் காரணம் யாது?**

- 'ஞானம்' கவிதை இடையறாது செய்யும் அறப்பணியாம் சமூகப் பணியை உணர்த்துகிறது.
- வீட்டின் சாளரத்தில் எத்தனை முறை புழுதி ஒட்டினாலும், கரையான் மண் வீடு கட்டினாலும் துடைக்கிறோம். சுத்தப்படுத்துகிறோம்.
- சுத்தப்படுத்தும் இப்பணியை முதிர் வயதாகும் வரை செய்து கொண்டேதான் இருக்கிறோம்.
- சமுதாயத்திலும் சீர்கேடுகள் தொடர்ந்து ஏற்படும்.
- அவலங்கள் நடந்துகொண்டேதான் இருக்கும்.
- எனினும் அவற்றைத் தடுத்து சமூகத்தைச் சீர்படுத்தும் பணியான அறப்பணியை தொடர்ந்து நாம் செய்துகொண்டே இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

காலக்கணிதம் பாடல் பொருளை விளக்குக.

கவிஞன் நானே காலத்தைக் கணிப்பவன். உள்ளத்தில் உதிக்கும் பொருளை வார்த்தை வடிவம் கொடுத்து ஒரு உருவமாய் அவற்றை நான் படைப்பதால் இப்பூமியில் நானும் புகழ்பெற்ற தெய்வம். பொன்னைவிட விலை உயர்ந்த செல்வம் என்னுடைய கருத்துகள். சரியானவற்றை எடுத்துச் சொல்வதும், தவறானவற்றை எதிர்ப்பதும் என் பணி. படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று பணிகளும் நானும் கடவுளும் அறிந்தவை.

கவிஞனாகிய நான் காலமாகிய கணிதம் போன்றவன். கவிதைகளில் கருவான பொருளைக் கூட பயன்படும் பொருளாக ஆக்குவேன் என்கிறார் கவிஞர்.

கவிஞனாகிய நானே அனைத்தின் தொடக்கம் ஆவேன். நானே முடிவும் ஆவேன். நான் சொல்வது தான் நாட்டினுடைய சட்டம் ஆகும்.

**சித்தாளின் இன்னல்களை விளக்குக.**

- பொற்காலமாக இருந்தாலும் சித்தாள் தலையில் எழுதப்பட்டதோ கற்காலம்.
- தன் வாழ்வை தொலைத்துவிடாமல் காத்துக்கொள்வதற்காக தலையில் கை வைப்பவள்.
- தலைக்கனமே இவளுக்கு வாழ்வாகிப் போனது.
- அடுத்தவர் கனவுக்காக அலுக்காமல் சுமக்கும் இவளின் மனச் சுமைகளை செங்கற்கள் அறியாது.

**கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரி.**

**வீரமாமுனிவரின் உவமை உருவக கவிதாஞ்சலி :**

- கருணையனின் தாய் மறைந்துவிட்டாள்.
- கருணையன் தன் கையைக் குவித்துப் 'பூமித்தாயே! என் அன்னையின் உடலை காப்பாயாக என்று கூறி, குழியிலே மலர்ப்படுக்கையை பரப்பினான்.
- அன்னையின் உடலை மண்ணிட்டு மூடி மலர்களையும் தன் கண்ணீரையும் பொழிந்தான்.
- என் தாயின் மார்பில் மணிமாலையென அசைந்து வாழ்ந்தேனே! இப்பொழுது.
- இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து காய்ந்து மணியாகு முன்பே, தூய மணி போன்ற மழைத்துளி இன்றி வாடிக் காய்ந்து விட்டது போல நானும் வாடுகிறேன்.
- என் மனம் மரக்கிளையில் இருந்து பறிக்கப்பட்ட மலர்போல் வாடுகிறது.
- தீயையும் நஞ்சையும் தன் முனையில் கொண்ட அம்பு துளைத்ததால் ஏற்படும் புண்ணின் வரியைப் போல என் துயரம் வேதனை தருகிறது.
- துணையைப் பிரிந்த ஒரு பறவையைப் போல நான் இக்காட்டில் அழுது வாடுகிறேன்.
- சரிந்த வழுக்கு நிலப்பகுதியிலே தனியே விடப்பட்டுச் செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல் ஆனேன்.

- நவமணிகள் பதித்த மணிமாலைகளைப் பிணித்தது போன்று நல்ல அறன்கள் எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பனாகிய கருணையன் புலம்பினான்.
- இப்புலம்பலைக் கேட்டு பல்வேறு இசைகளை இயக்கியது போல் தேன் மலர்கள்தோறும் மணம் வீசும் மலர்களும், மலர்ந்த சுனை தோறும் உள்ள பறவைகளும், வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போல கூச்சலிட்டன.

இவ்வாறு வீரமாமுனிவர் உவமை, உருவக மலர்களால் தன் கவிதை மூலம் எலிசபெத்துக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.